கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (வடக்கு மாகாணம்) சுற்றறிக்கை - 07/2018
கைதடி
2018.11.26

சகல கூட்டுறவுச் சங்கங்களினது தலைவர்களுக்கும்,

## வடக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களினது இயக்குநர் சபைக்கான படி வழங்கல்.

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட/நியமிக்கப்பட்ட இயக்குநர் சபையின் தலைவர் மற்றும் இயக்குநர்சபை உறுப்பினருக்கு 2018.12.01 ந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுறவு சங்கத்தின் மாதாந்த இலாபநட்டக் கணக்கின் அடிப்படையில், கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட உச்ச எல்லைக்கமைவாக தலைவர் மற்றும் உறுப்பினர் படியினை வழங்கலாம். இதற்கு முன் தலைவர்கட்கான படி தொடர்பில் வெளியிடப்பட்ட 02/2013 சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

| தொ.இல | மாதாந்த தேறிய இலாபத் தொகை | மாதாந்தம் வழங்கக் கூடிய உச்ச அளவு | |
|---|---|---|---|
| | | தலைவர் படி | இய.சபை.உறுப்பினர் படி |
| 1 | 25000/= வரை | 4000/= | 1000/= |
| 2 | 25001/= லிருந்து 50000/= வரை | 5500/= | 1250/= |
| 3 | 50001/= லிருந்து 100,000/= வரை | 6000/= | 1500/= |
| 4 | 100,001/= லிருந்து 200,000/= வரை | 7000/= | 1750/= |
| 5 | 200,001/= லிருந்து 300,000/= வரை | 8000/= | 2000/= |
| 6 | 300,001/= லிருந்து 400,000/= வரை | 9000/= | 2250/= |
| 7 | 400,001/= லிருந்து இற்கு மேல் | 10000/= | 2500/= |
| | | | |

குறிப்பு : மாதாந்த தேறிய இலாபத் தொகை என்பது ஒரு சங்கத்தின் கிராமிய வங்கிச் செயற்பாடு தவிர்ந்த மற்றைய சகல வியாபார தொழிற்பாட்டு பிரிவுகளை உள்ளடக்கிய பொது இலாபநட்டக்கணக்கின் தேறிய இலாபம் ஆகும். (பணியாளர்களின் வாழ்கைச்செலவுப்படி உள்ளடக்கியதாக தேறிய இலாபம் கணிப்பிடப்படவேண்டும்). தேறிய இலாபம் சரியாக கணிப்பிடப்பட்டதை உறுதிப்படுத்தவேண்டியது பொதுமுகாமையாளரதும்/ செயலாளரதும் கணக்காளரதும் கடமையாகும். தவறான இலாபக் கணிப்பீடு இடம்பெற்று பிழையான படி கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பது பின்னர் கண்டுபிடிக்கப்படின் அவற்றை உரியவர்களிடமிருந்து மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இயக்குநர் சபைப்படி வழங்குகையில் பின்வரும் வரையறைகள், நிபந்தனைகள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

1) 1.1 கூட்டுறவு சங்கமொன்றில் தெரிவு மூலம் பதவிக்கு வரும் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர், அரசாங்க உள்ளூராட்சி, கூட்டுத் தாபன உத்தியோகத்தராக இருப்பின் அட்டவணையில் குறிப்பிட்டவாறு தனது படியினை மாதாந்தம் பெற்றுக்கொள்ளலாம்.

1.2 1.1ல் கூறப்பட்டவாறான, படியினை மாதாந்தம் பெறும் குறித்த உத்தியோகத்தர்கள் தாபன விதித் கோவை தொகுதி-1 அத்தியாயம் IX ம் பிரிவு 2ன்படி பெற்றுக் கொள்ளும் படியின் 10% இனை திரட்டிய நிதிக்குச் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு கழிக்கப்படும் 10% நிதி முறையே அவ்வவ் உத்தியோகத்தர்களது திணைக்கள தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

1.3 அரசாங்க அல்லது உள்ளூராட்சி, அல்லது அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ஒருவர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உரித்தான அதிகாரங்களின் பிரகாரம் தலைவரின் பதவிக்கு அல்லது உறுப்பினராக பெயர் குறித்து நியமிக்கப்படின், அவர் தனது திரட்டிய சம்பளத்தின் $\frac{1}{3}$ பங்கு அல்லது அட்டவணையில் குறிப்பிட்ட உச்ச எல்லை இவற்றில் எது குறைவோ அத்தொகையை மாதாந்தம் தலைவர் படியாகப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றினை வழங்கமுன் 1.2 ம் பந்தியில் குறிப்பிட்டவாறு திரட்டிய நிதிக்கு 10%கழித்த பின்னருள்ள மீதித் தொகையை வழங்க வேண்டும். இவ்வாறு கழித்த 10% தொகையை மேல் குறிப்பிட்டதற்கிணங்க் சம்பந்தப்பட்ட்வர்கட்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2) ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில், சம காலத்தில் ஒருவர் தலைவராக பணிபுரிவாராயின் அல்லது அவர் தமக்குரிய படியினை ஒரு சங்கத்திலோ அல்லது பொருத்தமான விகிதாசாரத்தில் தலைவராகப் பணிபுரியும் சகல சங்கங்களில் இருந்தோ பெற்றுக் கொள்ளலாம். எவ்வாறாயினும் தான் தலைவராக பணிபுரியும் சகல கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்படும் தலைவர் படியானது மேல் அட்டவணையிலும் பந்தி. 1.1, 1.2, 1.3 இல் குறிப்பிட்டதற்கமைய இருப்பதுடன் அது ஏதாவது ஒரு உச்ச எல்லைக்கு மேற்படலாகாது. சம்பந்தப்பட்ட சங்கங்களின் மாதாந்த தேறிய இலாபங்களின் அடிப்படையில் உச்ச எல்லை தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3) மேற்காட்டியவாறு இயக்குநர் சபைப் படி வழங்குவது தொடர்பாக அட்டவணையில் கூறப்பட்டவாறான உச்ச எல்லைக்கு அமைவாகப் பெறக் கூடியவாறு சங்கத்தின் நடைமுறைவிதியை தயாரித்து பொதுச்சபையின் அனுமதியுடன் மாற்றம் செய்யப்பட வேண்டும். சங்கத்தின் பொதுச்சபை செயலிழந்து காணப்படின் இயக்குநர்சபையின் அனுமதியுடன் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியைப் பெற்று கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

4) சங்கமொன்றின் தலைவர் ஒருவர் சுகவீனம் அல்லது விசேட காரணங்களுக்காக நீண்ட காலம் கடமைக்கு சமூகமளிக்க முடியாவிடத்து அச்சங்க உபதலைவர் ஒரு மாதத்திற்கு மேலாக பதில் தலைவராகக் கடமையாற்றுபவாராயின், அவர் இயக்குநர் சபையின் அனுமதியுடன் குறித்த முடிவுற்ற முழுமாதத்திற்கான படியினை மட்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் முடிவுறாத மாதங்களுக்கு பெறப்படலாகாது.

5) இயக்குநர் சபைப் படியினை வழங்கமுன் அந்த மாதத்திற்கான படிவம் 28 / படிவம் 128 (மாதாந்த செயற்பாட்டறிக்கை) கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரசன்னத்துடன் இடம்பெறும் சங்கத்தின் இயக்குநர் சபையின் கூட்டத்தில் பரிசீலனைககு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே படியினை பெற்றுக்கொள்ள முடியும். இக் கொடுப்பனவானது எவ்வகையிலும் முற்பணமாக வழங்கப்படக் கூடாது என்பதுடன் வேறு எக் கொடுப்பனவுக்கும் எதிராக சீர் செய்தலுமாகாது.

6) சங்கத்தின் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவர் நாளாந்த கடமைகளை மேற்கொள்வதற்காக சங்கத்திற்கு வீட்டிலிருந்து பிரயாணம் செய்தமைக்கான படி எதனையும் பெற்றுக் கொள்ளலாகாது.

7) கூட்டுறவு சங்கமொன்றின் தலைவர், இயக்குநர் சபைக்கு அட்டவணையில் காட்டியவாறு படி வழங்குவதனை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தும் போது, இச் சுற்றுநிருப ஏற்பாடுகளை கவனித்து படி வழங்கக் கூடியவாறுள்ள சான்றுகளையும் பொதுச்சபை, இயக்குனர்சபையின் தீர்மானங்களையும், உரிய மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு சமர்ப்பித்து அவரது முன்னனுமதியைப் பெற்ற பின்னரே அவ்வாறான கொடுப்பனவுகளை வழங்க முடியும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

8) வெவ்வேறு காரணங்களால் சிறிது காலத்துக்கு அல்லது இடையிடையே நட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச்சங்கங்கள் மேற்படி இயக்குநர் படி தொடர்பாக தற்காலிக மாற்றுத் தீர்மானம் ஏதும் எடுக்க விரும்பின், இவ் விடயம் தொடர்பில் அதற்கான பொதுச்சபை, இயக்குனர்சபையின் தீர்மானங்கள் உள்ளிட்ட சான்றுகளுடன் உதவி ஆணையாளரது முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் .

ஒ/ப பொ.வாகீசன்.
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச்சங்கப் பதிவாளரும் (வ.மா)

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வட மாகாணம்

பிரதி : 1) சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்:
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் இக் கொடுப்பனவு கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன், கணக்காய்வின் போதும் கணக்காய்வாளரால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்பதனையும் தாங்கள் அறிவுறுத்துவதற்காக.

2) பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா.